(இ) திருப்பூர் மாவட்டம், அவினாசி மற்றும் சேலம்–பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் ஏற்பட்ட விபத்துகளில் உயிரிழந்த மற்றும் காயமுற்றோருக்கு மருத்துவ உதவி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார், என்ன, சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார், நீங்கள் சொல்லுங்கள்.*

திரு. க.நா. விஜயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று அதிகாலை திருப்பூர் மாவட்டம், அவினாசி அருகிலே தேசிய நெடுஞ்சாலையில் கேரள அரசுப் பேருந்தும், டைல்ஸ் ஏற்றிவந்த கன்டெய்னர் லாரியும் மோதிய விபத்தில், கிட்டத்தட்ட 20 நபர்கள் உயரிழந்தது குறித்து இப்பேரவையின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலையில். . .(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உறுப்பினர்கள், இருக்கையில் உட்கார்ந்து கொண்டே பேசாதீர்கள். (குறுக்கீடுகள்) நான் அனுமதி கொடுக்கவில்லை, உட்காருங்கள் திரு. முஹம்மது அபூபக்கர். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று அதிகாலையில் அவினாசிக்கு அருகிலே ஒரு விபத்து ஏற்பட்டது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இதுகுறித்து என்னிடத்திலே தொலைபேசி மூலமாகத் தொடர்புகொண்டு வருத்தம் தெரிவித்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். இன்று, 20–2–2020 அதிகாலை 4–00 மணியளவில், திருப்பூர் மாவட்டம், அவினாசி அருகில், சேலம்–கொச்சி தேசிய நெடுஞ்சாலையில் சேலத்திலிருந்து எர்ணாகுளம் சென்ற கேரள மாநில அரசுப்*

2020 பிப்ரவரி 20] [*திரு. எடப்பாடி கே. பழனிசாமி*]

பேருந்தின்மீது எதிர்ப்புறமாக கேரளாவிலிருந்து டைல்ஸ் ஏற்றி வந்து கொண்டிருந்த கன்டெய்னர் லாரியின் முன்பக்க டயர் வெடித்தபோது மோதியதில், பேருந்தில் பயணம் செய்த கேரளாவைச் சேர்ந்த 20 நபர்கள் உயரிழந்துள்ளனர் என்ற செய்தியைக் கேட்ட நான் மிகுந்த வேதனை அடைந்துள்ளேன். இச்செய்தி குறித்து அறிந்தவுடன், விபத்தில் பலத்த காயமடைந்து, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்றுவரும் 23 நபர்களுக்கு உயரிய சிகிச்சை அளிக்கவும், இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் உறவினர்களுக்கு விவரங்களைத் தெரிவிக்க உதவி மையம் ஒன்றை ஏற்படுத்தவும், கேரள மாநிலம், பாலக்காடு மாவட்ட நிருவாகத்தையும், கேரள மாநில உயர் அதிகாரிகளையும் தொடர்புகொண்டு, உயிரிழந்தவர்களின் உடல்களை அவரவர் சொந்த ஊர்களுக்குக் கொண்டு செல்வதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்து கொடுக்குமாறு திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், காவல் துறை உயர் அதிகாரிகளுக்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். இவ்விபத்தில் லேசான காயமடைந்த 5 நபர்கள் உரிய சிகிச்சை பெற்று கேரளா திரும்பிச் செல்கின்றனர்.

இன்று அதிகாலை ஒரு மணியளவில் நடந்த மற்றொரு நிகழ்வில், நேபாள நாட்டைச் சேர்ந்த சுற்றுலாப் பேருந்து, கன்னியாகுமரியிலிருந்து சேலம் மாவட்டம், ஓமலூர் வழியாக இராஜஸ்தான் நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது, சேலம்–பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் ஏற்பட்ட சாலை விபத்தில், பேருந்தில் பயணம் செய்த 2 பெண்கள் உள்பட 6 நேபாள நாட்டினர் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வேதனை அடைந்துள்ளேன். இந்நிகழ்வில், மேலும், 24 பேர் காயமுற்று மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளனர். அவர்களுக்குத் தேவையான மருத்துவ வசதி உள்ளிட்ட அனைத்து உதவிகளையும் செய்து தருமாறு சேலம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் காவல் துறை உயர் அதிகாரிகளுக்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். மேற்கண்ட இரு சாலை விபத்துகளில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு என்னுடைய ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

பிற்பகல் 12–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, என்னவென்று சொல்லுங்கள்.*